2021 ஆகஸ்ட் 13] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

இருந்தது. அரசுப் பேருந்துகளில் 2010–2011 இல் 208.36 இலட்சமாக இருந்த தினசரி பயணிகளின் எண்ணிக்கை, 2019–2020 இல் கோவிட் பெருந்தொற்றுக்கு முன்னரே 131.42 இலட்சமாகக் குறைந்துள்ளது என்பது வருந்தத்தக்கது. அனைத்து அண்டை மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கினும், தமிழ்நாட்டில் உள்ள நகர மற்றும் புறநகர்ப் பேருந்து சேவைகளுக்கான கட்டணம் மிகக் குறைவாக இருக்கும் சூழலிலும், இவ்வாறு நிகழ்ந்துள்ளது. மிகவும் பழைய பேருந்துகள் மற்றும் மிக அதிக மேல்நிலைச் செலவுகள் உட்பட, பல காரணிகளால் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. வெள்ளை அறிக்கையில் போக்குவரத்து நிறுவனங்களின் கவலையளிக்கக்கூடிய நிதி நெருக்கடி விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

(92) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தில் உள்ள வெண்பலகை கொண்ட நகரப் பேருந்துகளில் பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் ஆகியோர் இலவசமாகப் பயணிக்கலாம் என அறிவித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நோக்கத்திற்காக, 703 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 750 கோடி ரூபாய் டீசல் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 623.59 கோடி ரூபாய் ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) உதவியுடன் 1,000 புதிய பேருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

(93) திறமையான, வசதியான மற்றும் மலிவான பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவது, பொதுப் போக்குவரத்து அமைப்பில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும் என இந்த அரசு கருதுகிறது. பொருளாதாரத்தில் பல்பெருக்கு செயல்திறன், உற்பத்தித்திறன் அதிகரிப்பு, ஏழை மக்களின் வருமான உயர்வு மற்றும் சுற்றுச்சூழலில் நேர்மறைத் தாக்கம் என பல நேர்மறை வெளிப்பாடுகள் இதனால் ஏற்படும். இந்த அரசு, நிதி மேம்பாட்டில் கவனம் செலுத்தும் அதே வேளையில், பேருந்து சேவைகளின் இயக்கத் திறனை மேம்படுத்துவதற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும். போக்குவரத்து நிறுவனங்கள் சிக்கனமாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கும், விதிமுறை அடிப்படையிலான செயல்திறன் குறியீடுகளின் இலக்கை அடைவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இலவச அல்லது மானியம் அளிக்கப்பட்ட பேருந்துப் பயணம் வேண்டுமென அரசு விரும்பும் இனங்களில், நெறிசார் செலவு அளவுருக்களின்